பக்கங்கள்:-24

காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மாசி 03 | செவ்வாய்க்கிழமை | 17.02.2026 | அதிர்வு 201 |
|---|---|---|---|---|---|

## ஜனாதிபதி இன்று இந்தியா பயணம்



இந்தியப்பிரதமர்நரேந்திர மோடியின் விசேட அழைப்பையேற்று, 'AI Impact Summit 2026' சர்வ தேச மாநாட்டில் 06



# பிரிட்டன் துணைப் பிரதமர் இன்று தமிழ்த் தலைவர்களுடன் சந்திப்பு!

## கொழும்பு வெஸ்ட் மினிஸ்டர் ஹவுஸில் கூடுகின்றனர் ‘வீடு’, ‘சைக்கிள்’, ‘சங்கு’ கட்சிகளின் முக்கியஸ்தர்கள்

பிரிட்டன் துணைப் பிரதமரான டேவிட் லம்மி, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இன்று செவ்வாய்க் கிழமை இலங்கைக்கு இராஜதந்திரப் பயண மொன்றை மேற்கொள்ளவுள்ளார். இதன் போது அவர் தமிழ்த் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் இந்தப் பயணம் அமையவுள்ளது. 07

# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உடனடியாகப் பதவி விலக வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி அதிரடி கோரிக்கை



சட்டத்தரணி புத்திக மல்லவாரச்சி மற்றும் அவரது மனைவி ஆகியோர் சுட்டுப்படு கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்குப் பொறுப் பேற்று, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்த இரட்டைப் படுகொலைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய தேசியக்கட்சியால்வெளியிடப்பட்டுள்ளவிசேடஅறிக் கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது. 06




தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வகையில், திம்புக் கோட்பாடுகளை முழுமையாக உள்ளடக்கிய சுயாட்சி அம்சங்களுடன் கூடிய புதிய அரசமைப்பு யோசனைகளை தயாரிப்பது என்று யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தமாகக் கொண்டுவரப்பட்டு நாட்டின் மீயுயர் சட்டத்தில் சேர்க்கப்பட்ட மாகாண சபை முறைமையையும், அதன் கீழான அதிகார பரவலாக்களையும் கூட நடைமுறைப்படுத்த முடியாத திண்டாட்டத்தில் இருக்கும் தமிழினம், மீண்டும் வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடுகள் என்ற பெயர்களில் பகிரங்கமாகக் கோரிக்கைகளை முன்வைத்து, தமக்கு தேவையான நீதியான தீர்வை பெற்றுக் கொள்ள முடியுமா, அதற்கான வழி வரைபடம் யாது என்பவை பற்றி எல்லாம் பல கேள்விகள் 06





# ஐ.எம்.எவ்.முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா நேற்று இலங்கை வருகை

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா உள்ளிட்ட விசேட பிரதிநிதிகள் குழுவினர் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று பிற்பகல் இலங்கைக்கு வருகை தந்தனர்.

தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பிரதிநிதிகள் குழுவை வரவேற்றார்.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட சேதங்களையும் அதன் தாக்கத்தையும் நேரடியாகப் பார்வையிடும் நோக்கில், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கு வருகை தந்திருப்பதுடன், இன்று முற்பகல் கம்பளை பகுதிக்கும் அவர்கள் விஜயம் செய்யவுள்ளனர்.

பின்னர், கொழும்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய மற்றும் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்த அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

அனர்த்தத்துக்குப் பிறகு இலங்கையை இயல்புநிலைக்குக்கொண்டுவருவதற்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் வலுவான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கும் சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கக்கூடிய உதவிகள் குறித்து மேற்படி கலந்துரையாடல்களின் போது விசேட கவனம் செலுத்தப்படும்.















# கல்முனை மாநகர சபையில் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

**(அஸ்லம் எஸ். மௌலானா)**

கல்முனை மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள 04 பொது நூலகங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நேற்று திங்கட்கிழமை கல்முனை மாநகர சபை கேட்போர் கூடத்தில் வெகு விமரரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். கணக்காளர் ஏ.எஸ். மனாஸிர் அஹ்ஸன், உள்ளூராட்சி உதவியாளர் சர்ஜுன் தாரிக் அலி, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வரவர்மன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். டிவிப் நௌஷாட், நூலகர்களான ஏ.எஸ். எம்.முஸ்தாக், ஏ.சி.ஹரீஷா சமீம், ஏ.எச். எம்.தௌபீக், எஸ்.எம்.ஆர்.அமீனுத்தீன் மற்றும் நூலக உதவியாளர்கள், பொறுப்பாசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி தினகரன் வார மஞ்சரியின் ஆசிரியர் க. குணராசா ஆற்றிய சிறப்புரை ஒலிபரப்பப்பட்டது. 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்கம் சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் நூலகங்களை சிறந்த முறையில் தொடர்ச்சியாக பயன்படுத்தி வருகின்ற வாசகர்கள் பலர் இதன்போது நினைவுச் சின்னங்கள் வழங்கி, கௌரவிக்கப்பட்டனர். கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபியின் சேவைகளைப் பாராட்டி, 04 நூலகர்களும் இணைந்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.



















# வைஸ்ராய் ஸ்பெஷல் சொகுசு சுற்றுலா ரயில் நேற்றுத் திருகோணமலையை வந்தடைந்தது

(எஸ்.கீதபொன்கலன்)

வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுடன இலங்கையின் புகழ்பெற்ற வைஸ்ராய் ஸ்பெசல் (Viceroy Special) என்ற சொகுசு சுற்றுலா ரயில் திருகோணமலை ரயில் நிலையத்தை நேற்று வந்தடைந்தது.

இது இலங்கையில் தற்போது இயங்கக்கூடிய நிலையில் உள்ள நீராவி இயந்திரம் (Steam Locomotive) கொண்ட ரயில் ஆகும்.

சுமார் 75 ஆண்டுகளுக்கு மேலான பழமையான வரலாற்றைக் கொண்ட இந்த இயந்திரம், பிரித்தானியர் காலத்து புகையிரதப் பயணத்தை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 2024 பெப்ரவரி மாதம் முதல் இந்த ரயில் மீண்டும் தனது சேவையை ஆரம்பித்துள்ளது

இது வழக்கமான பயண அட்டவணையில் இயங்குவதில்லை. வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காகவும், விசேட நிகழ்வுகளுக்காகவும் பிரத்தியேகமாக முன்பதிவு செய்யப்பட்டு இயக்கப்படுகிறது.

இந்த சொகுசு ரயிலில்ல் 19ஆம் நூற்றாண்டு பாணியிலான உட்புற அலங்காரங்களுடன், நவீன காலத்து குளிரூட்டப்பட்ட பெட்டிகள், உணவகம், மதுபான அரங்கு மற்றும் காட்சிகளை ரசிப்பதற்கான விசேட வசதிகள் என்பனவும் உள்ளன.

இதில் இரண்டு குளிர்சாதன வசதி கொண்ட சொகுசு பெட்டிகள் உள்ளன. இவை பழங்கால பாணியில் அலங்கரிக்கப்பட்டவை.

ரயிலின் உள்ளேயே உயர்தர உணவுகள் மற்றும் பானங்கள் வழங்கும் வசதி உள்ளது.

இது ஜே.எஃப். டூர்ஸ் அண்ட் டிராவல்ஸ் நிறுவனத்தினால் இலங்கை ரயில்வேத் திணைக்களத்துடன் இணைந்து இயக்கப்படுகிறது. இது கொழும்பிலிருந்து கண்டி, நுவரெலியா (நானுஓயா),எல்ல மற்றும் திருகோணமலை போன்ற நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு இயக் கப்படுகிறது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற இந்த ரயில் திருகோணமலை ரயில் நிலையத்தை வந்தடைந்த நிகழ்வு, இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் ஒரு முயற்சியாகப் பார்க்கப்படுகிறது.












# மகா சிவராத்திரி தினத்தன்று மஸ்கெலியாவில் அறநெறி அமைப்பின் ஏற்பாட்டில் நடை பவனி

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

‘இந்து சமயம் மற்றும் அற நெறியை காப்போம்’ என்ற தொனிப்பொருளின் கீழ் மகா சிவராத்திரி தினத்தை முன் னிட்டு நேற்று முன்தினம் மஸ்கெலியா பிறவுண்லோ ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சமூக கலாசார அறநெறி அமைப்பின் ஏற்பாட்டில் நடை பவனி இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் மஸ்கெலியா பிரதேசசபை தவிசாளர், உப தவிசாளர், மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி, பொலிஸ் நிலைய உத்தி யோகஸ்தர்கள் மற்றும் பிறவுண்லோ ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய நிர்வாக சபையினர் அறநெறி ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் அறநெறி பாட சாலை மாணவர்கள் கலந்து சிறப் பித்தார்கள். நிகழ்வில் அறநெறி பாட சாலை மாணவர்கள் சைவ சமய கொடி யான நந்தி கொடிகள் ஏந்திய வண்ணம் பவனியாக சென்றனர்.















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்தாலும் – இத்தகைய முடிவுகளை எடுத்து, பகிரங்க அறிவிப்புகளை வெளியிடுபவர்களிடம் அதற்கான வழி வரைபடமோ, திட்டமோ எதுவும் இல்லை என்பது தெளிவான போதிலும் – இத்தகைய நிலைப்பாடுகளில் இருந்து சற்றும் விட்டுக் கொடுக்க முடியாத வெளிப்படுத்தல்களைத்தான் தமிழ்த் தலைமைகள் தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றன.

இந்தப் பின்புலத்தில் திம்புகோட்பாடு பற்றி ஒரு சுற்றுப் பார்ப்பது நல்லது.

இலங்கை அரசுத் தரப்பையும், தமிழ் தேசிய கட்சிகள் மற்றும் தமிழ்ப் போராளிகள் குழுக்களையும் பூட்டான் தலைநகர் திம்புவில் சமரச முயற்சிக்காக 1985 நடுப்பகுதியில் இழுத்து வந்து மேசையில் கட்டிப்போட்டது இந்தியா.

அந்தச் சமயத்தில் தமிழர் தரப்பு ஒன்றுபட்டு – ஏகமனதாக – தங்கள் நிலைப்பாடாகவும் கோரிக்கையாகவும் முன்வைத்ததே இப்போதும் திம்புக் கோட்பாடு என அழைக்கப்படுகிறது.

இந்தக் கோட்பாட்டில் நான்கு விடயங்கள் அப்போது முன்வைக்கப்பட்டன வாயினும், அதில் நாலாவது விடயம் பிரதானமாக மலையகத் தமிழர்களை சார்ந்ததாக இருந்தது. இலங்கையில் உள்ள அனைத்துக் குடிமக்களுக்கும் அவர்களுக்கான சிவில் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே அந்த நான்காவது அம்சம். அந்தச் சமயத்தில் நாடற்றவர்களான நிலையில் இக்கட்டில் இருந்த மலையகத் தமிழர்கள் தொடர்பில் அந்த விடயம் முன்வைக்கப்பட்டது. ஆனால் காலகதியில் அந்தப் பிரச்சினை இப்போது ஓரளவு தீர்வுக்கு வந்துவிட்டது. ஆகவே அந்த நாலாவது விடயத்தை தள்ளி வைத்துவிட்டு மற்றைய மூன்று விடயங்களையும் பார்ப்போம்.

ஒன்று – தமிழினம் இலங்கையில் தனித்துவமான ஒரு தேசிய இனம்.

இரண்டு – இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களுக்கான தனித்துவமான தாயகம் உள்ளது.

மூன்று – தமிழினத்திற்கு தங்களுடைய அரசியல் தலைவிதியை தாங்களே தீர்மானிக்கின்ற சுயநிர்ணய உரிமை உள்ளது.

– இந்த மூன்று அடிப்படைகளும் ஏற்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே தமிழ் கட்சிகளின் நிலைப்பாடாக இருந்தது. அந்த மூன்றுமே திம்புக் கோட்பாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

1985இல் திம்புவில் நடைபெற்ற பேச்சுக்களின் போது தமிழர் தரப்பு முன்வைத்த இந்த மூன்று கோட்பாடுகளையும் அங்கேயே இலங்கையின் பிரதிநிதிகள் நிராகரித்தார்கள். என்றாலும் பின்னர் வந்த காலத்தில் சர்வதேச மட்டத்தில் இந்த திம்பு கோட்பாட்டின் மூன்று அம்சங்களையும் இலங்கை ஏற்றுக்கொண்டது என்பது ஆணித்தரமாகப் பதியப்பட வேண்டும்.

1987 ஜூலையில் கையெழுத்தான இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் முன்னுரையில் திம்பு கோட்பாட்டின் முதல் இரண்டு அம்சங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இலங்கையில் தமிழர்கள் தனியான தேசிய இனம் என்பதும், வடக்கும் கிழக்கும் அவர்களின் பூர்வீக தாயகம் என்பதும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் முன்னுரையில் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதனை ஏற்று இலங்கை ஜனாதிபதி சர்வதேச மட்டத்தில் ஒப்பமிட்டிருக்கிறார்.

இதற்குப்பின்னர்17ஆண்டுகள்கழித்து ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதான பேச்சுக்களின் போது உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இலங்கை தமிழர்களுக்கு தீர்வு தருவதற்கு தாங்கள் இணங்குகின்றார்கள் என்ற அறிவிப்பை இலங்கை அரசு பகிரங்கமாக சர்வதேச மட்டத்தில் ஒப்புக்கொண்டிருந்தது. அதுவே ஒஸ்லோ அறிவிப்பு என்று இப்போத எல்லோராலும் பேசப்படுகின்றது.

ஆக, திம்பு பேச்சுக்களின் போது தமிழர் தரப்பு ஒன்றுபட்டு முன்வைத்த திம்பு கோட்பாட்டை அச்சமயத்தில் இலங்கை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் பின்னர் இலங்கை – இந்தியா ஒப்பந்தத்தின் மூலமும், ஒஸ்லோ அறிவிப்பு மூலமும் கொழும்பு ஆட்சிப் பீடம் சர்வதேச மட்டத்தில் ஒப்புக்கொண்டு இணங்கியது என்பது மறுக்க முடியாதது.

ஆனால் யுத்தம் முடிந்த பின்னர் அச்சமயம் அதிகாரத்திலிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் எந்தப் பிரதேசமும் தனியான எந்த ஓர் இனத்துக்கும் உரிய தாயகம் என்றோ அல்லது அந்தப் பிரதேசத்திற்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்றோ கூற முடியாது என அறிவித்தமையுடன், இலங்கை முழுவதும் இலங்கை மக்கள் அனைவருக்கும் பொதுவானது என்றும் பிரகடனப்படுத்தியிருந்தார்.

யுத்த காலத்தில் இலங்கை சர்வதேச மட்டத்தில் ஒப்புக்கொண்ட விடயங்களின் அடிப்படையிலேயே இப்போது திம்பு கோட்பாடு என்ற பெயரில் தீர்வு தயாரிப்பது குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் உட்பட்ட தமிழ் தேசிய பேரவை இப்போது வலியுறுத்தி நிற்கின்றது.

கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இப்போது சமஷ்டி குறித்தும் திம்பு கோட்பாடு குறித்தும் அதிகம் பேசுகின்றது. ஆயினும் அதிலும் ஒரு விடயம் இருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து 1949 இல் பிரிந்து, இலங்கைத் தமிழரசுக் கட்சியை தந்தை செல்வா ஸ்தாபித்த போது அதனுடைய பிரதான கொள்கை இலக்காக சமஷ்டி தீர்வைத் தமிழருக்கு பெறுவதை அவர் முன்னிறுத்தினார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பேரனாரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவருமான ஜீ.ஜீ. பொன்னம்பலம் அந்த சமஷ்டி கோரிக்கையை ‘சம்மட்டி’ என்று விதண்டாவாத பாணியில் விமர்சித்து கிண்டல் பண்ணினார். சமஷ்டிக் கோரிக்கையை முழுமையாக எதிர்த்து வைத்தார்.

இப்போது அவரது பேரன் அந்த சமஷ்டியையும் திம்பும்கோட்பாட்டையும் கைகளில் தூக்கி வைத்துக் கொண்டு அரசியல் செய்கிறார்.

சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட சமயம் அதனை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கடுமையாக எதிர்த்தமை போன்று, திம்புக் கோட்பாடு வந்த சமயத்தில் அதில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சம்பந்தப்படவே இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று அரசியல் கட்சிகளாக செயல்படும் தமிழ்ப் போராளிகள் குழுக்களான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல். எவ். ஆகியவற்றுடன் விடுதலைப் புலிகள் இயக்கமும் திம்பு கோட்பாட்டின் உருவாக்கத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தன. அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கமாக இருந்த தமிழரசு கட்சியும் அதில் முக்கிய பங்கு வகித்தது.

திம்பு கோட்பாட்டை உருவாக்கிய தமிழர் தரப்பில் சம்பந்தப்படாத ஒரு தமிழ் அரசியல் கட்சி என்றால் அது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்தான். அந்தச் சமயத்தில் திம்பு பேச்சுக்கு அந்த கட்சி அழைக்கப்படவும் இல்லை அது தொடர்பான பேச்சுகளில் சம்பந்தப்படவும் இல்லை.

ஆக,ஆரம்பத்தில்தனதுகட்சிசம்பந்தப்படாத – தொடர்பற்ற – ‘சமஷ்டி’ என்ற கோரிக்கையையும் ‘திம்புக் கோட்பாட்டையும்’ பின்னால் வந்து கையில் எடுத்துக் கொண்டு, இப்போது ஏதோ தம்முடைய பிரசவம் போல அவற்றை முன்னிறுத்தி சண்ட பிரசண்டம் பண்ணுகிறார் கஜேந்திரகுமார். ஒரு வகையில் பார்த்தால் அது வேடிக்கைதான்...!

## ஜனாதிபதி இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று செவ்வாய்க்கிழமை மாலை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

செயற்கை நுண்ணறிவை (Artificial Intelligence)மனிதகுலத்தின்நன்மைக்காகவும், பொறுப்புணர்வுடனும் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தியப் பிரதமரின் தலைமையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐந்து நாட்கள் நடைபெறவுள்ள இம்மாநாட்டில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 19 ஆம் திகதி விசேட உரையாற்றவுள்ளார்.

உலகளாவிய ரீதியில் 20 நாடுகளின் அரச தலைவர்களும், 45 இற்கும் மேற்பட்ட நாடுகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் எதிர்கால முன்னெடுப்புகள் மற்றும் உலகளாவிய சவால்களை முறியடிக்க அதனை எவ்வாறு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தலாம் என்பது குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

தனது இந்த ஐந்து நாள் விஜயத்தின் போது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல உலகத் தலைவர்களுடன் முக்கிய இருதரப்புப் பேச்சுகளையும் முன்னெடுக்கவுள்ளார்.

## பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“சட்டத்தரணி மற்றும் அவரது மனைவி படுகொலை செய்யப்பட்டமையானது, நாட்டின் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் பாதுகாப்புக்கு விடுக்கப்பட்ட பெரும் அச்சுறுத்தலாகும்.

தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அரசியல்மயமாக்கப்பட்டுள்ளதால், இந்தப் படுகொலை குறித்து நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணை நடைபெறும் என்பதில் எமக்குத் துளியும் நம்பிக்கையில்லை.

நாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் கொலைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தத் தவறிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், அதற்குப் பொறுப்பேற்று உடனடியாகத் தனது பதவியைத் துறக்க வேண்டும்.

அத்துடன், நாட்டிலுள்ள சட்டத்தரணிகளின் பாதுகாப்பை அரசு உடனடியாக உறுதிப்படுத்த வேண்டும்.” – என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## பிரிட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பயணத்தில் பிரிட்டன் துணைப் பிரதமர் டேவிட் லம்மி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருடன் உயர்மட்டப் பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்புகளில், இருதரப்பு உறவுகள், பொருளாதாரஒத்துழைப்பு, முதலீட்டு வாய்ப்புகள், அபிவிருத்தி ஆதரவு, கல்வி மற்றும் சமூக பாதுகாப்பு உட்படப் பல துறைகள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

டேவிட் லம்மி இன்று காலை இலங்கை வந்தடைந்து, திட்டமிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பின்னர் இன்று மாலையே இலங்கையிலிருந்து புறப்படவுள்ளார்.

இந்தக் குறுகிய பயணத்தின்போது அவர் தமிழ்த் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்பு கொழும்பில் உள்ள வெஸ்ட் மினிஸ்டர் ஹவுஸில் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

பிரிட்டன் துணைப் பிரதமருடனான சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தப் பயணத்தின் பிரதான அம்சமாக ஐ.நா. பணியகத்தில் நடைபெறும் நிகழ்வில் குழந்தைகள் பராமரிப்புக்கான உலகளாவிய பரப்புரைக்கான சாசனம் தொடர்பான உடன்பாட்டிலும் டேவிட் லாமி கையெழுத்திடுவார்.

இந்த சாசனம், குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் சர்வதேச முயற்சிகளை வலுப்படுத்துவதையும், குடும்ப அடிப்படையிலான பராமரிப்பு முறைகளை ஊக்குவிப்பதையும், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான உள்ளடக்கமான சேவைகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

டேவிட் லம்மியின் வருகை, புதிய இலங்கை அரசுடன் பிரிட்டன் இணைந்து செயற்படுவதற்கான உறுதியை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய இராஜதந்திர முன்னேற்றமாகப் பார்க்கப்படுகின்றது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிரி. துணைப் பிரதமரின் வருகை

பிரிட்டன் துணைப் பிரதமரான டேவிட் லம்மி, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இன்று செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு இராஜதந்திரப் பயணமொன்றை மேற்கொண்டு வருகை தரவுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் இந்தப் பயணம் அமையவுள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்தப் பயணத்தில் பிரிட்டன் துணைப் பிரதமர் டேவிட் லம்மி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருடன் உயர்மட்டப் பேச்சுகளை நடத்தவுள்ளார். தமிழ் கட்சிகளின் தலைவர்களையும் அவர் சந்திக்கின்றார்.

வெளிப் பார்வைக்கு இது பிரிட்டிஷ் தலைவர் ஒருவரின் வருகையாக மட்டும் நோக்கப்பட்டாலும், தென்னிலங்கை பௌத்த - சிங்களத் தீவிரப் போக்குடைய தரப்புக்கள் மத்தியில் இந்த வருகைக்கு எதிரான கடும் கசப்புணர்வு எழுந்திருப்பது அவதானிக்கத்தக்கது. அதற்குக் காரணம் உண்டு.

இலங்கையின் இறுதி கட்ட யுத்தத்தின்போது மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் பாதுகாப்பு படைகளின் முன்னாள் கூட்டுப்படை தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒவ் த ப்ளீட் வசந்த கரனன்கொட, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜெயசூர்யா மற்றும் கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோருக்கு எதிராக பிரிட்டன் தடை விதித்ததன் பின்ன ணியில் பிரதான சூத்திரதாரியாகச் செயல்பட்டவர் இந்த டேவிட் லம்மி என்று பௌத்த- சிங்கள தீவிரவாத தென்னிலங்கைத் தரப்புக்கள் பொங்கு கின்றன.

உலகளாவிய இலங்கை மன்றத்தின் உறுப்பினர் யாசஸ் தர்மதாஸ இத்தகைய குற்றச்சாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்தியும் இருக்கிறார்.

2025 ஆரம்பத்தில் பிரிட்டனின் வெளியுறவு, பொதுநலவாய மற்றும் மேம்பாட்டு விவகாரங்களுக்கான செயலாளராக (அமைச்சராக) டேவிட் லம்மி இருந்த போதுதான், அவரே மேற்படி இலங்கை தரப்பினர்களுக்கு எதிரான தடை அறிவிப்பை பிரிட்டன் சார்பில் வெளியிட்டார். அந்த அறிவிப்பை விடுத்து ஏழு மாதங்களுக்கு பின்னரே டேவிட் லம்மி நீதித்துறை மற்றும் வெளிவிவகார அமைச்சராகவும் துணைப் பிரதமராகவும் நியமிக்கப் பட்டார் என்று கூறப்படுகிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப் படாமல் இருப்பது உறுதி செய்யப்படும் என்று தாம் பிரிட்டிஷ் தேர்தல் சமயத்தில் வாக்குறுதி அளித்திருந்தார் என்பதை 2025 மார்ச்சில் டேவிட் லம்மி நினைவூட்டி இருந்தார் என்பதையும், அந்தச் சமயத்தில்தான் மேற்படி இலங்கைப் படைத் தளபதிகளுக்கும் கருணாவுக்கு எதிரான பிரிட்டனின் தடை விதிப்பு உத்தரவு வெளிவந்தது என்பதையும் தென்னிலங்கைத் தீவிரப் போக்குத்தரப்புகள்சுட்டிக்காட்டுகின்றன.


இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் எதிராக இத்தகைய போக்கில் செயற்படும் இங்கிலாந்தின் துணைப் பிரதமரிடம் அது குறித்து தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு விளக்கம் கோர வேண்டும் என்று தென்னிலங்கைத்தரப்புகள்துடியாய்த்துடிக்கின்றன.

ஆயினும், ஒரே ஒரு நாள் இராஜதந்திரப் பயணமாக இலங்கை வந்து செல்லும் இங்கிலாந்து துணை பிரதமரிடம் அப்படி ஏதும் வினா எழுப்பும் தைரியத்தில் கொழும்பு இருப்பதாகத் தெரியவில்லை.

# பல்லேகலவில் சம்பவம்!

## வாண வேடிக்கை காட்டினார் நிசாங்க

## ஆஸியைத் துரத்தி அடித்தது இலங்கை




**பதும் நிசாங்க**

| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்ட்ரிகள் |
|---|---|---|---|
| 100 | 52 | 05 | 10 |




ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நேற்றைய போட்டியில் நிசாங்க வாண வேடிக்கை காட்ட இலங்கை அணி வெற்றிபெற்று சுப்பர்-8இற்குத் தகுதி பெற்றது.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை- ஆஸ்திரேலியா இடையிலான போட்டி நேற்று இரவு கண்டி – பல்லேகலவில் நடைபெற்றது.

ஏற்கனவே, குழு 'பி' இல் சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் தோல்வியடைந்தமையால், இந்தப் போட்டியில் வெற்றிபெற்றாக வேண்டும் என்ற கட்டாயத்தில் ஆஸ்திரேலியா களமிறங்கியது.

இந்த ஆட்டத்துக்கான நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி ஆஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. மிட்செல் மார்ஷ் (54), டிராவிஸ் ஹெட் (56) ஆகியோர் அரைச் சதங்களை அடித்துக்கொடுக்க, ஆஸ்திரேலியா 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 181 ஓட்டங்களைச் சேர்த்தது.

இலங்கை சார்பாக பந்துவீச்சில், துஷான் கெமந்த மூன்று விக்கெட்டுகளைப் பிடுங்க, துஷ்மந்த சமீர இரு விக்கெட்டுகளையும், தீட்சன, வெல்லலகே, கமிந்து மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பின்னர் 182 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது இலங்கை.

இரண்டாவது ஓவரில் ஓர் ஓட்டத்தை அடித்த நிலையில் குசல் பெரேரா ஆட்டமிழக்க, மறுமுனையில் நின்ற பதும் நிசாங்கவுடன் குசல் மென்டிஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. நிசாங்கா 32 பந்துகளில் அரைச்சதமும், குசல் மெண்டிஸ் 35 பந்துகளில் அரைச்சதமும் அடித்தனர்.

பின்னர் இலங்கை அணி 100 ஓட்டங்களைக் கடந்த நிலையில் குசல் மெண்டிஸ் (51) ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய பவன் ரத்நாயக்க, நிசாங்கவுக்கு சிறப்பான ஒத்துழைப்பை வழங்கினார்.

நாலாபுறமும் மேலும் கீழுமாக பந்துகளை விளாசி வாண வேடிக்கை காட்டிய பதும் நிசங்க அசைச்தத்தை சதமாக மாற்றினார். அவர் 52 பந்துகளில் சதம் விளாசினார். நடப்பு ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் அடிக்கப்பட்ட முதல் சதம் இதுவாகும்.

இவரது சதத்தால் இலங்கை 18 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 184 ஓட்டங்களைச் சேர்த்து அபார வெற்றி பெற்றது.

நிசாங்க 100 ஓட்டங்களுடனும், ரத்நாயக்க 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர்.

ஆஸி. சார்பாக பந்துவீச்சில் மார்க்கஸ் ரொனிஸ் இரு விக்கெட்டுகளைப் பிடுங்கினார்.

ஆட்டநாயகனாக நிசாங்க தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை 3 போட்டிகளில் விளையாடி மூன்றிலும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. ஆஸ்திரேலியாவின் அடுத்த சுற்றுக்கான வாய்ப்பு மங்கியுள்ளது.




**வில் ஜாக்ஸ்**

| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்டரிகள் |
|---|---|---|---|
| 53 | 22 | 04 | 03 |

# மரண பயத்தைக் காட்டிய இத்தாலி தடுமாறி வென்றது இங்கிலாந்து

இத்தாலிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் இங்கிலாந்து மரண பயயத்துடன் - தடுமாறி வென்று அடுத்து சுற்றுக்கு முன்னேறியது.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து தனது கடைசி லீக் ஆட்டத்தில் நேற்று மாலை இத்தாலியை எதிர்கொண்டது. இதில் வெற்றி பெற்றால் மாத்திரமே சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேற முடியும் என்ற நிலையில் இங்கிலாந்து களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 202 ஓட்டங்களைக் குவிததது. வில் ஜாக்ஸ் ஆட்டமிழக்காமல் 22 பந்துகளில் 53 ஓட்டங்கள் விளாசினார்.

பின்னர் 203 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் இத்தாலி களம் இறங்கியது. கத்துக்குட்டி அணியான இத்தாலி சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இங்கிலாந்துக்கு கடும் சவால் விட்டது.

தொடக்க வீரர் அந்தோணி மோஸ்கா முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஜே.ஜே. ஸ்மட்ஸும் ஆட்டமிழந்தார். ஆனால், மற்றொரு தொடக்க வீரரான ஜஸ்டின் மோஸ்கா அபாரமாக விளையாடி 34 பந்துகளில் 43 ஓட்டங்களை விளாசினார்.

அணித்தலைவர் மனென்டி 11 பந்துகளில் 12 ஓட்டங்கள் சேர்த்து வெளியேறினார். அடுத்த வந்த பென் மனென்டி, கிரான்ட் ஸ்டீவார்ட் இங்கிலாந்துக்கு மரண பயத்தைக் காட்டினர். பென் மனென்டி 25 பந்துகளில் 4 பௌண்டரிகள், 6 சிக்ஸர்களுடன் 60 ஓட்டங்களை விளாசினார்.

மறுமுனையில் ஸ்டீவர்ட் சிக்ஸராக பறக்க விட்டார். 17ஆவது ஓவரில் 2 சிக்ஸர்களும், 18ஆவது ஓவரில் 2 சிக்ஸர்களும் பறக்கவிட்டார்.

இதனால் கடைசி 2 ஓவர்களில் 30 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஆனால் 19ஆவது ஓவரை சாம் கர்ரன் சிறப்பாக வீசினார். அத்துடன் ஸ்டீவர்ட்னை வீழ்த்தினார்.

ஸ்டீவர்ட் 23 பந்துகளில் 45 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். இந்த ஓவரில் சாம் கர்ரன் 5 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக்கொடுத்தார்.

கடைசி ஓவரில் 25 ஓட்டங்கள் இத்தாலிக்குத் தேவைப்பட்டன. ஓவர்டன் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்த இத்தாலி 20 ஓவர்களில் 178 ஓட்டங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.. இதனால் இங்கிலாந்து 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறியது.

ஆட்டநாயகனாக வில் ஜாக்ஸ் தெரிவானார்.

## ரி-20 உலகக் கிண்ணம்: அணிகளின் நிலை - 16.02.2026

### குழு - ஏ

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 3.050 |
| 2 | ஐ.அமெரிக்கா | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | 0.788 |
| 3 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | -0.403 |
| 4 | நெதர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -1.352 |
| 5 | நமீபியா | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -2.443 |

### குழு - பி

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 2.462 |
| 2 | சிம்பாப்வே | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.984 |
| 3 | அவுஸ்திரேலியா | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | 0.414 |
| 4 | அயர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | 0.150 |
| 5 | ஓமன் | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -4.546 |

### குழு - சி

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மே.இ.தீவுகள் | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.820 |
| 2 | இங்கிலாந்து | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | 0.201 |
| 3 | ஸ்கொட்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | 0.359 |
| 4 | இத்தாலி | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.588 |
| 5 | நேபாளம் | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -1.942 |

### குழு - டி

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தென்னாபிரிக்கா | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.477 |
| 2 | நியூசிலாந்து | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 0.701 |
| 3 | ஆப்கானிஸ்தான் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.215 |
| 4 | ஐ.அ.இராச்சியம் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.797 |
| 5 | கனடா | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.526 |

போ-போட்டி, வெ-வெற்றி, தோ-தோல்வி, ச-சமனிலை, மு.அ.-முடிவு அற்றது, பு-புள்ளி, ஓ.ச.-ஓட்ட சராசரி




# நோன்பை முன்னிட்டு இலங்கை முஸ்லிம்களுக்கு சவுதி அன்பளிப்பாக 50 தொன் பேரீச்சம்பழங்கள்

(அஷ்ரப் ஏ சமத்)

அடுத்த ஓரிரு தினங்களில் ஆரம்பிக்கும் புனித நோன்பு மாதத்தை முன்னிட்டு சவுதி அரேபியா அரசாங்கம் இலங்கை முஸ்லிம்களுக்காக 50 தொன் எடை உள்ள பேரீச்சம் பழங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று கொழும்பில் உள்ள சவுதி தூதரகத்தில், சவுதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் மஹ்மூத் அல் கஹ்தானி தலைமையில் இடம்பெற்றது. “மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் (KSrelief) வழங்கிய பேரீச்சம்பழ நன்கொடையை, மத விவகாரங்கள் மற்றும் கலாச்சார பிரதி அமைச்சர் முனீர் முலாஃபர் சவுதி தூ



துவர் இடமிருந்து பெற்றுக்கொண்டார்,

மேலும் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, வெளிநாட்டு பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா ஆகியோரும் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள் .

இந் நிகழ்வில் சவுதி நிவாரண மையத்தின் பிரதிநிதி, முஸ்லிம் சமய மற்றும் கலாசார விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் , அமைச்சின் உயர் அதிகாரிகள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர், பல மதத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதி அமைச்சர் முனீர் முளாஃபர், இந்த நன்கொடை மூலம் சவுதி அரேபியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று கூறினார். ரமழான் காலத்தில், இந்த நாட்டில் உள்ள முஸ்லிம் சமூகம் சவுதி அரேபியாவுக்கு நன்றி கூறக் கடமை பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்



# வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு அண்மையில் ஓட்டோ ஒன்று வீதியில் தீப் பிடித்து எரிந்தது

(மரியசீலன் திலைக்ஸ்)

பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்று அதன் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மருதங்கேணி – பருத்தித்துறை பிரதான வீதியில் திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது. இதில் பயணித்துக் கொண்டிருந்த பயணிகளும் சாரதியும் தெய்வாதீனமாக காப்பாற்றப் பட்டுள்ளனர்.

தீப்பற்றி எரிந்த ஓட்டோவ பாதையில் சென்று கொண்டிருந்தவர்கள் சேர்ந்து தீப் பரவலைக் கட்டுப்படுத்தி ஓரளவு பாதுகாத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு அண்மித்த மருதங்கேணி – பருத்தித்துறை வீதியில் இடம் பெற்றுள்ளது



# கிவுல் ஓயாத் திட்டத்தின் பாதிப்புகள் பற்றித் தமிழர்களுக்கு விழிப்பூட்டுவது குறித்து முல்லைத்தீவில் கலந்துரையாடல்

**(விஜயரத்தினம் சரவணன்)**

மகாவலி அதிகாரசபையின் (எல்) வலயத்தினால் செயற்படுத்தப்படவுள்ள – தமிழர்களுக்குப் பாதகமான – கிவுல் ஓயா நீர்த்தேக்க குடியேற்றத் திட்டம் தொடர்பில் தெளிவூட்டல்களை வழங்கி, தமிழ் மக்களை விழிப்படையச் செய்வது தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இக் கலந்துரையாடல், மறைந்த ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் நினைவேந்தலுடன் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து கிவுல் ஓயாத் திட்டத்தின் பாதக நிலை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. தமிழ் மக்களுக்கு கிவுல் ஓயாத் திட்டத்தின் பாதக நிலை தொடர்பில் தெளிவூட்டி விழிப்படையச் செய்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்சன், முல்லைத்தீவு ஊடக அமையத்தைச் சார்ந்த ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

















# யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நான்கு நாள்களில் பன்னிரண்டு அமர்வுகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நாளை மறுதினம் 19ஆம் திகதி வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்கள் பன்னிரண்டு அமர்வுகளாகப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழா தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக விவரிப்பு நேற்று திங்கட்கிழமை நண்பகல் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில், பல்கலைக்கழக சபை அறையில் நடைபெற்றது.

இதன் போது முன்னாள் கலைப்பீடாதியும், பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்குழுத் தலைவருமான பேராசிரியர் சி.ரகுராம் பட்டமளிப்பு விழா பற்றி விளக்கமளித்தார்.

அங்கு அவர் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு:-

இம்முறை பட்டமளிப்பு விழாவின் போது, 376 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து 557 உள்வாரி மாணவர்களுக்கும், 252 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருக்கின்றன. 66 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களுடன் ஒருவருக்கு வியாபார நிர்வாகத்தில் சான்றிதழ் அடங்கலாக 3 ஆயிரத்து 252 பேர் பட்டங்களையும், தகமைச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது வேந்தர் தகைசார் பேராசிரியர் இராஜரட்ணம் குமாரவடிவேல் பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

இப்பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானபீடம், கலைப்பீடம், விஞ்ஞானபீடம், விவசாயபீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், இந்துக்கற்கைள் பீடம், சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தைச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில், திறந்த மற்றும் தொலைக்கல்வி முறைமை மூலம் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 376 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து 557 உள்வாரி மாணவர்களுக்கும், 252 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட உள்ளன. 66 பேர் உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களையும், ஒருவர் வியாபார நிர்வாகத்தில் சான்றிதழையும் பெற இருக்கின்றார்.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 376 மாணவர்கள் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை எண்மரும், முது மெய்யியல்மாணிப் பட்டத்தை 16 பேரும், சுகாதார முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தை 7 பேரும், சுகாதார முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை ஒருவரும், பொது நிர்வாகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தை ஒருவரும், சைவசித்தாந்தத்தில் முதுமாணிப் பட்டத்தை ஒருவரும், கல்வியில் முதுமாணிப்பட்டத்தை 154 மாணவர்களும், நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 12 மாணவர்களும், கல்வியில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 118 மாணவர்களும், வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை 42 பேரும் பெறுவதுடன், ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 16 பேரும் பெறவிருக்கின்றனர்.

உள்வாரி மாணவர்களாக, மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 137 மாணவர்கள் மருத்துவமாணி, சத்திரசிகிச்சைமாணிப் பட்டத்தையும், விவசாய பீடத்தைச் சேர்ந்த 118 மாணவர்கள் விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

இவர்களுடன் இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்திலிருந்து மருந்தகவியல்மாணி சிறப்புப் பட்டத்தை 49 மாணவர்களும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப்பட்டத்தை 64 மாணவர்களும், தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தை 46 மாணவர்களும் பெறவிருக்கின்றனர்.

அத்துடன், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து சிறப்பு வியாபார நிர்வாகமாணிப் பட்டத்தை 358 மாணவர்களும், வியாபார நிர்வாகமாணிப் (பொது) பட்டத்தை 11 மாணவர்களும், சிறப்பு வணிகமாணிப் பட்டத்தை 107 மாணவர்களும், வணிகமாணிப் (பொது) பட்டத்தை இருவரும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன், கலைப்பீடத்தில் இருந்து சிறப்புக் கலைமாணிப்பட்டத்தை 333 மாணவர்களும், பொதுக் கலைமாணிப் பட்டத்தை 182 மாணவர்களும், மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை 29 மாணவர்களும், சட்டமாணியில் சிறப்புப் பட்டத்தை 91 மாணவர்களும், கலைமாணி சிறப்புப் பட்டத்தை (பழைய பாடத்திட்டத்தில்) ஐவரும், கலைமாணிப் (பொது) பட்டத்தை 15 பேரும் பெறவிருக்கின்றனர்.

மேலும், சேர். பொன் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தைச் சேர்ந்த 169 மாணவர்கள் நடனம், இசை மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் துறைகளில் நுண்கலைமாணிப் பட்டத்தையும், மேலும் நடனம் மற்றும் இசையில் நுண்கலைமாணிப் பட்டத்தை (பழைய பாடத்திட்டத்தில்) ஒவ்வொருவரும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 97 பேர் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 46 பேர் பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 79 பேர் விஞ்ஞானமாணிப் (பொதுப்) பட்டத்தையும், 18 பேர் கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 23 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், பெறவுள்ளனர்.

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் வவுனியா வளாகத்தின் மாணவர்களும் பட்டம் பெற உள்ளனர். அதன் பிரயோக விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த 16 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 24 மாணவர்கள் கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 49 மாணவர்கள் சுற்றுச் சூழல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 100 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் 47 மாணவர்கள் பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 18 பேர் சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர். வியாபாரக் கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 65 மாணவர்கள் கணக்கியலிலும் நிதியியலிலும் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 19 மாணவர்கள் வியாபாரப் பொருளியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 29 மாணவர்கள் மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 28 மாணவர்கள் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 24 மாணவர்கள் வியாபார முகாமைத் துவமாணிப் (பொதுப்) பட்டத்தையும், 76 மாணவர்கள் செயற்றிட்ட முகா மைத்துவத்தில் சிறப்பு வியாபார முகா மைத்துவமாணிப் பட்டத்தையும், 12 மாணவர்கள் செயற்றிட்ட முகாமைத்து வத்தில் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தையும்

தொடர்ச்சி▼

# யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நான்கு நாள்களில் பன்னிரண்டு அமர்வுகள்

தொடர்ச்சி▲

பெறவிருக்கின்றனர். மேலும், தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தில் இருந்து 69 மாணவர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தையும் பெற இருக்கின்றனர்.

இவர்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் திறந்த மற்றும் தொலைதூரக் கற்கைகள் முறைமை மூலம் பட்டக் கற்கைகளைப் பூர்த்தி செய்த 76 மாணவர்கள் சிறப்பு வணிகமாணிப் பட்டத்தையும், 15 மாணவர்கள் வணிகமாணிப் பட்டத்தையும், 161 மாணவர்கள் வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

மேலும், 21 மாணவர்கள் தமிழ் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ்களையும், 9 பேர் விஞ்ஞானத்தில் உயர் தகைமைச் சான்றிதழ்களையும், 5 பேர் விஞ்ஞானத்தில் தகைமைச் சான்றிதழ்களையும், ஒருவர் கலைத்துறையில் உயர் தகைமைச் சான்றிதழையும், 30 பேர் சொத்து மதிப்பீட்டில் தகைமைச் சான்றிதழ்களையும், ஒருவர் வியாபார நிர்வாகத்தில் சான்றிதழையும் பெற்றுக்கொள்வது இப் பட்டமளிப்பு விழாவின் போது உறுதிப்படுத்தப்படும்.

மேலும், இப்பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 94 தங்கப்பதக்கங்களும், 69 பரிசில்களும், 15 புலமைப்பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன.

ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் சீர்பெறும் விருதான பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கங்கள் வழங்கப்படவிருக்கின்றன. இதன்படி 2021 ஆம் கல்வியாண்டுக்குரிய பல்கலைக்கழக அடிப்படையிலான தங்கப்பதக்கத்தைக் கலைப்பீடத்தைச் சேர்ந்த ஒருவர் பெற்றுக் கொள்கின்றார்.

பீடமட்டத்தில் 2022 ஆம் கல்வியாண்டுக்குரிய தங்கப் பதக்கத்தைக் கலைப்பீடத்தில் இருந்து ஒருவரும், விஞ்ஞான பீடத்தில் இருந்து ஒருவரும் பெறுகிறார்கள்.

பீடமட்டத்தில் 2023 ஆம் கல்வியாண்டுக்குரிய தங்கப் பதக்கத்தை முகாமைத்துக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து ஒருவரும், மருத்துவ பீடத்தில் இருந்து ஒருவரும் பெறுகின்றனர்.

மேலும், 2022 ஆம் கல்வியாண்டுக்குரிய தூய மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் சிறந்த செயலாற்றுகைக்கான பேராசிரியர் கந்தையா குணரட்ணம் தங்கப்பதக்கத்தைப் பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவர் பெறவிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பட்டமளிப்பு வைபவத்துக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் நிகழ்வுகளாக அமையும் நினைவுப் பேருரைகளான சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரை மார்ச் மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை அன்றே பிற்பகல் 4.00 மணிக்கும் இடம்பெறவிருக்கின்றன.

சேர். பொன் இராமநாதன் நினைவுப்பேருரையை ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சுற்றுச்சூழல் தொடர்பியல் துறையின் ஓய்வுபெற்ற துணைப் பேராசிரியர் நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா, “சமூக ஈடுபாட்டுடன் செயற்படும் பல்கலைக்கழகம்: ஆய்வு, உரையாடல் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு குறித்த ஆழ்ந்த சிந்தனைகள்” என்ற தலைப்பிலும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் குழந்தை மருத்துவத் துறையைச் சேர்ந்த இருக்கைப் பேராசிரியர் கீதாஞ்சலி சத்தியதாஸ் “அடுத்த தலைமுறையைப் பேணிப் பாதுகாப்பது: குழந்தைகள் ஆரோக்கியம் குறித்த சமகாலக் கண்ணோட்டங்கள்” என்ற தலைப்பிலும் நிகழ்த்தவிருக்கின்றனர். இந் நிகழ்வுகளுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவம் இனிதே நிறைவு பெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 50 ஆண்டுகளை நிறைவு செய்து பயணிக்கும் வேளையில், 40ஆவது பட்டமளிப்பு விழா இடம்பெற இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு முற்றுப் புள்ளியாகவே புதிய சட்டமூலம்

**முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் எச்சரிக்கை**

(வவுணதீவு நிருபர் )

இந்த அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஊடக சுதந்திரம், கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் மற்றும் ஓரளவேனும் மக்கள் அனுபவித்த ஜனநாயக உரிமைகளுக்கு முற்றுப் புள்ளியாக அமையக்கூடும் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றுத் திங்கள் கிழமை காலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுநர்கள், அதே போல் உள்நாட்டு மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் உள்ளூர் சிவில் அமைப்புக்களைச் சேர்ந்தோர் அனைவரும்



அவர்களது கவலையை தெரிவித்துள்ளனர்.

முன்மொழியப்பட்ட இந்த சட்டமூலம் மக்களை தண்டித்து, அரசைப் பாதுகாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதே இதன் சுருக்கம். இதில் ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் எல்லைகள் அற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது ஊடக சுதந்திரத்திற்கு கடுமையான அச்சுறுத்தலாகும். இந்தப் புதிய சட்டமூலம் தற்போதைய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை விட மோசமானது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று முழுமையாக எதிர்த்த மக்கள் விடுதலை முன்னணி இன்று அதை விட மோசமான சட்டத்தை கொண்டுவரப் போகிறது.

பாதுகாப்பு படைகளுக்கு கூடிய அதிகாரம், மக்களின் சுதந்திரமான ஜனநாயக போராட்டங்களை ஒடுக்குதல், முறையான விசாரணை செய்யாமல் நீண்ட காலம் பொலிஸ் காவலில் தடுத்து வைத்தல், ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக எழுத முடியாது, ஊடக துறையினை கட்டுப்படுத்துதல் என்பன போன்ற பல மக்கள் நாலன் சார்ந்த ஜனநாயக செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதே இந்த சட்டமூலத்தின் நோக்கம். ஆகையால் இந்த சட்டமூலம் மிகவும் ஆபத்தானது. நாட்டுக்கு இது இப்போது உள்ள சூழ் நிலையில் தேவையற்றது. - என அவர் தெரிவித்தார்.



# பாக்.உள்துறை அமைச்சரின் வருகை நட்புறவை மேலும் வலுப்படுத்துகிறது!

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

பாகிஸ்தான் உள்துறை அமைச்சரின் வருகை மற்றும் பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அணியின் இலங்கை வருகை என்பன இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துகிறது என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டுக்கு வருகை தந்துள்ள பாகிஸ்தானின் உள்துறை மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டு அமைச்சர் சையத் மொஹ்சின் ரசா நக்வி (Syed Mohsin Raza Naqvi) வெளிநாடுகளில் வசிக்கும் பாகிஸ்தானியர்கள் மற்றும் மனிதவள அபிவிருத்திக்கான அமைச்சர் நிச்சயமாக, சவுத்ரி சாலிக் ஹுசைன் (Chaudhry Salik Hussain) ஆகியோர் உள்ளிட்ட தூதுக்குழுவுடனான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் கோரிக்கையை ஏற்று, பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வருகைக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ததற்காகப் பாகிஸ்தான் பிரதமருக்கு ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்தார். டித்வா சூறாவளி உட்பட இலங்கை மக்கள் சிரமங்களை எதிர்கொண்ட போதெல்லாம் பாகிஸ்தான் இலங்கைக்கு அளித்த மனமார்ந்த ஆதரவை ஜனாதிபதி இதன்போது நன்றியுடன் பாராட்டினார்.

பாகிஸ்தான் பிரதமருக்கும், ஜனாதிபதிஅநுரகுமாரதிசாநாயக்கவுக்கும்இடையேயான தொலைபேசி உரையாடலின் பின்னரே, போட்டியில் விளையாட பாகிஸ்தான் கிரிக்கெட் அணி முடிவு செய்ததாக இதன்போது தெரிவித்த அமைச்சர் சையத் மொஹ்சின் ரசா நக்வி, அதற்காக பாகிஸ்தான் பிரதமர் சார்பாக ஜனாதிபதிக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கை அரசால் தமது கிரிக்கெட் அணி உட்பட அனைவருக்கும் வழங்கப்பட்ட சிநேக பூர்வமான விருந்தோம்பல் மற்றும் இலங்கை மக்களின் நட்புரீதியான வரவேற்பையும் அமைச்சர் மேலும் பாராட்டினார்.

இலங்கையுடனான உறவுகளை மேலும் வளர்த்து, பிராந்தியத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஒத்துழைப்புடன் செயற்படுவது பாகிஸ்தானின் நோக்கம் என்றும், குறிப்பாக இரு நாடுகளுக்கும் இடையே முதலீடு, தொழிற் சந்தை மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான விடயங்கள் குறித்து எதிர்காலத்தில் விரிவான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் பாகிஸ்தான் தூதுக்குழுவினர் மேலும் குறிப்பிட்டனர்.

தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோருடன் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதர் பஹீம் உல் அஜீஸ் (Faheem Ul Aziz), இலங்கைக்கான பாகிஸ்தான் துணைத் தூதர் சுனைரா லத்தீப் (Zunaira Latif), பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் பிரதான செயற்பாட்டு அதிகாரி சுமைர் அகமது சையத் (Sumair Ahmad Syed) உள்ளிட்ட பாகிஸ்தான் பிரதிநிதிகள் குழுவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டது.







# வங்காள விரிகுடாவில் காற்றழுத்தம் மழை பெய்வதற்கான சாத்திய நிலை!

இலங்கைக்குத் தென்கிழக்கே மத்திய வங்காள விரிகுடா கடற்பரப்பில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி ஒன்று உருவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகக் கடற்பரப்புகள் கொந்தளிப்பாக இருக்கும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் மேல், சபரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றும் எதிர்வரும் நாள்களிலும் வடக்கு, வடமத்திய, மத்திய, ஊவா, கிழக்கு மாகாணங்களில் மழையுடனான வானிலை நிலவலாம் என்று திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய, ஊவா, கிழக்கு மாகாணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

ஏனைய பிரதேசங்களில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதியின் பணிக் குழாமில் பிரபாத் சந்திரகீர்த்தி நியமனம்!

ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியாக பிரபாத் சந்திரகீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க, நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்துக் கையளித்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர உத்தியோகத்தரான பிரபாத் சந்திரகீர்த்தி, அரச சேவையில் 26 வருட கால அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையில் 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி இணைந்த அவர், 2010 இல் நிர்வாக சேவையின் தரம் ஐ இற்கு தரம் உயர்த்தப்பட்டார். 2019 இல் விசேட தரத்துக்குப் பதவி உயர்வு பெற்றார். ஊவா மாகாண சபையின் கல்வி மற்றும் சுற்றுலா அமைச்சின் உதவிச் செயலாளரக 2001 இல் முதல் நியமனம் பெற்ற அவர் 2003 ஆம் ஆண்டு பியகம உதவி பிரதேச செயலாளராகப் பணியாற்றினார்.

அதனைத் தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றத்தின் சபை முதல்வர் அலுவலகத்தின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டதோடு 2010 இல் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டு 2015 வரை பணியாற்றினார்.

2015ஏப்ரல்முதல்2020ஆம்ஆண்டு வரை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றிய பிரபாத் சந்ரகீர்த்தி, 2020 ஒக்ரோபர் முதல் 2023 டிசெம்பர் மாதம் வரை தொழிலாளர் ஆணையாளர் நாயகமாக பணியாற்றினார்.

2024 ஜனவரி மாதம் சுற்றாடல், வனஜீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராக அவர் நியமிக்கப்பட்டார். 2024 நவம்பர் முதல் இன்றுவரை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராகப் பணியாற்றினார். அவர் தற்போது அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாகவும் கடமையாற்றி வருகின்றார்.





# சைவமகாசபையின் 'அன்பேசிவம்' விருது பெறுகிறார் சந்நிதி மோகனதாஸ் சுவாமி!

அகில இலங்கை சைவ மகா சபை ஆண்டுதோறும் மகா சிவராத்திரி தினத்தன்று அறிவிக்கும் “அன்பேசிவம்” விருது இந்த முறை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளுக்கு வழங்கப்படுகிறது என்று சைவ மகா சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சைவ மகா சபையின் செயலாளர் மருத்துவர் பரா.நந்தகுமார் வெளியிட்ட அறிக்கையில்,

கடந்த பல தசாப்தங்களாக ஈழமணித்திருநாட்டின் சிவ பூமியின் நாற்புறங்களிலும் அல்லுறும் மக்களுக்கு மனித நேய ஆன்மீகப் பணிகளை அளவிறந்த வகையில் ஆற்றி வருவதற்காக இந்த உயரிய விருது வழங்கப்படவுள்ளது.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆச்சிரம முதல்வராக செல்வச்சந்நிதி ஆலய சூழலில் 365 நாள்களும் பசிப் பணி தீர்க்கும் ஈழத்தின் நவயுக வள்ளலாராக சுவாமிகள் விளங்குகின்றார் என்றால் அது மிகையில்லை.

மலையகத்தின் மண்சரிவு அனர்த்தங்களில் உதவ பத்தாண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்த பயணம் இன்றுவரை தொடர்கிறது.

பல ஏழைக் குழந்தைகளுக்குத் தொடர் கல்வி உதவிகளாகவும், பாடசாலைகள் அறநெறிப் பாடசாலைகள் சிறுவர் இல்லங்களுக்கான பல பரிணாம உதவிகளாகவும் தொடர்கின்றது.

எம் தமிழ் சொந்தங்கள் தனித்து விடப்பட்ட இடங்களில் எல்லாம் சுவாமிகளின் அன்புக்கரம் தொடர்ந்து நீண்டு கொண்டிருக்கின்றது. அநுராதபுரம், பொலனறுவை அம்பாறையின் பல கிராமங்களில் சுவாமிகளின் உதவியால் பல கல்விச் சாலைகள், ஆலயங்கள் புத்துயிர் பெற்றிருக்கின்றன.


மாதாந்தம் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் பலருக்கு கல்வி மருத்துவ அறக்கொடைகள், வறிய சிறார்கள் பாடசாலை செல்ல சைக்கிள்கள் என பல மனிதநேய கைங்கரியங்கள் நடைபெற்று வருகின்றன.

சுவாமிகளின் வழி நடத்தலில் ஆன்மீக ஆற்றுப்படுத்தலுக்காகச் சந்நிதியான் ஆச்சிரமம் வாராந்தம் சைவச் சொற்பொழிவுகளையும் சந்நிதியான் சைவ கலை பண்பாட்டு பேரவை ஊடாக முன்னெடுப்பதோடு தொடர்ச்சியாக ஞானச் சுடர் இதழையும் வெளியிட்டும் வருகின்றது.

யாழிலிருந்து கிழக்கிலங்கை ஊடான பக்தி வைராக்கியம்மிக்க ஆயிரக்கணக்கான அடியவர்கள் பங்குபெறும் கதிர்காம பாதயாத்திரையில் சுவாமிகளின் அருள் வழிகாட்டல் உபசரணைகள் வார்த்தைகளுக்கு அப்பாற்றப்பட்டன.

எத்தனையோ கௌரவிப்புகளை விருதுகளை கண்டுவிட்ட போதும் மிக எளிமையான சிவனடியாராக, முருக பக்தராக “எல்லாம் அவன் அள்ளி தருகின்றான் நான் வழங்குகின்றேன்” என அடக்கமாக தெரிவிக்கும் சுவாமிகள் வாடிய பயிரைக் கண்ட போது எல்லாம் வாடும் உன்னதமானவராக திருமூலர் கூறும் சைவம் காட்டும் உயரிய மானிட நேயச் சிந்தையான அன்பே சிவதுக்கு உயிர்தந்த வள்ளலாக வாழ்ந்து வருவது கண்கூடாக நாம் அனைவரும் காணும் காட்சியாகும்.

இத்தகைய முன்னுதாரணமான ஆன்மீகப் பெரியவருக்கு, மனிதநேய வள்ளலுக்கு தம் உயரிய விருதான “அன்பே சிவம்” விருதை அகில இலங்கை சைவ மகா சபை இந்த சைவர்களின் அதி உன்னத விரத நாளாகிய இறை சிவனை நினைந்துருகும் மகா சிவாராத்தரி நாளில் அறிவிப்பதில் மீளவும் மட்டற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தி நிற்கின்றது.– என்றுள்ளது.



# இடம்பெயர்ந்தவர்கள் விரும்பினால் அவர்களுக்குக் குடியுரிமை வழங்குக!

## இந்திய மத்திய, தமிழக மாநில அரசுகளிடம் மனோ எம்.பி. கோரிக்கை



இலங்கையில் இருந்து குடிபெயர்ந்து, இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்து வரும் தமிழருக்கு கண்ணியமான, தீர்வு வழங்கப்பட வேண்டும். அவர்கள் விரும்பினால், இந்திய குடியுரிமை பெறலாம் அல்லது இலங்கை குடியுரிமையை தக்க வைத்து, பாதுகாப்பாக இலங்கைக்கு திரும்பும் சூழல் உருவாகும் வரை அகதி முகாம்களில் தொடர்ந்து வாழலாம்.

இத்தகைய தெளிவான நிலைபாட்டை இந்திய மத்திய, தமிழக மாநில அரசுகள் எடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில், தமிழக முதல்வர் ஸ்டாலின், பிரதமர் மோடிக்கு எழுதியுள்ள கடிதம் தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

இந்த மக்கள் 1980களில் இருந்து பல தசாப்தங்களாக முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். முதியோரை தாண்டி, இந்தியாவில் பிறந்தவர்கள் அல்லது சிறுவயதில் அங்கு கொண்டு செல்லப்பட்டவர்கள், இந்திய பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றவர்கள், இந்தியாவில் திருமணம் செய்து கொண்டு, நாட்டின் சமூக பொருளாதார அமைப்பில் முழுமையாக இணைந்துள்ளனர். இளைய தலைமுறை, விரும்பினால் அவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட வேண்டும்.

இந்த நீண்டகால பிரச்சினை, மனிதாபிமான அடிப்படையில் அணுகப்பட வேண்டும். அதே நேரத்தில், இந்தியக் குடியுரிமையை விரும்பாதவர்களுக்கு எந்த அழுத்தமும் இன்றி தங்கள் விருப்பை தெரிவு செய்ய முழு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

முகாம்களில் வசிப்பவர்களைத் தவிர, 1970கள் முதல் இலங்கையிலிருந்து, இடம்பெயர்ந்து, தற்போது சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களில் வாழும் இன்னொரு கணிசமான பிரிவினரும் உள்ளனர். இவர்கள் இந்திய சமூகத்தில், பொருளாதார, சமூகரீதியாக முழுமையாக இணைந்து வாழ்கின்றனர். பலர் அதிகாரப்பூர்வ ஆவணங்கள் இன்றியே வாழ்கின்றனர். இது தொடர்பில், தெளிவான கொள்கை இல்லாததால், அதிகாரிகளின் தொந்தரவுகளுக்கு உள்ளாகின்றனர்.

இவர்களுக்கு இந்திய கடவுச்சீட்டு பெறுவதில் கட்டுப்பாடுகள் உள்ளன. இலங்கை கடவுச் சீட்டை வைத்திருக்கவும் அச்சப்படுகின்றனர். இதனால் வெளிநாடுகளுக்கு பயணம் செய்வதில் தடைகள் ஏற்பட்டு, உறுதியற்ற சூழலில் வாழ்கின்றனர்.

இப்போது, அவர்களின் கடந்த கால வரலாற்றைப் புரிந்துணர்வுடன் ஏற்று கொண்டு, குடியுரிமையை சீரமைக்கும் தெளிவான நடைமுறை அவசியம். இந்த நீண்டகாலப் பிரச்சினைக்கு நிரந்தரமான, மனிதாபிமான தீர்வை வழங்க வேண்டிய காலம் வந்து விட்டதை, இந்திய மத்திய, தமிழக மாநில அரசுகள், இரண்டுமே உணர வேண்டும்.– என்று தெரிவித்துள்ளார்.

# நாடு தழுவிய ரீதியில் சுற்றிவளைப்பு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது!



பொலிஸ்மா அதிபரின் விசேட அறிவுறுத்தலுக்கமைய நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பின் போது சுமார் 31 ஆயிரத்து 525 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் பல்வேறு குற்றச் செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 20 பேர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கு அமைய 429 பேரும், திறந்த பிடியாணைகளுக்கு அமைய 203 பேரும் இதன் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பிலும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 527 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 96 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஏனைய போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பாக 4 ஆயிரத்து 560 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# வவுனியா பிறப்பு, இறப்புச் சான்றிதழ் விநியோக பிரிவு விரைவில் சீரமைப்பு

## வவுனியா அபிவிருத்திக் கூட்டத்தில் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

வவுனியா பிரதேச செயலக பிறப்பு, இறப்பு சான்றிதழ் விநியோக பிரிவு அடுத்த மூன்று மாதங்களில் சீரமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர் சத்தியலிங்கம் எம்.பியின் தலையீட்டையடுத்து பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வவுனியா பிரதேச செயலக பிறப்பு, இறப்பு சான்றிதழ் விநியோக பிரிவில் காணப்படும் குறைபாடுகள், தாமதங்கள், கவுண்டர்களின் எண்ணிக்கை குறைவு குறித்து வவுனியா பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த பிரதேச செயலாளர் தற்போது 2 அல்லது 3 ஆக உள்ள கவுண்டர்களை அடுத்த மூன்று மாதங்களுக்குள் 6 அல்லது 8 கவுண்டர்களாக அதிகரிக்க நடவடிக்கை எடுப்பார் என்று தெரிவித்தார்.

அத்துடன் அடுத்த மூன்று மாதங்களுக்குள் குறித்த பிரிவு சீரமைக்கப்பட்டு இந்த விடயம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அதன் பின்னர் குறித்த பிரிவில் தாமதங்கள் எவையும் இடம்பெறாது எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

# இலங்கை – ஈரான் நட்புறவை வலுப்படுத்த நடவழக்கை!

## நளிந்த ஜயதிஸ்ஸ உறுதி தெரிவிப்பு



ஈரான்மற்றும்இலங்கைக்கு இடையில் நிலவிவரும் நீண்டகால நட்புறவை எதிர்வரும் காலங்களில் மேலும் வலுப்படுத்துவதற்குத் தேவையான விடயங்கள் முன்னெடுக்கப்படும் என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஈரானின் தேசிய தினக் கொண்டாட்ட நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டிருந்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஈரானின் தேசிய தினக் கொண்டாட்ட நிகழ்வு கொழும்பு ஐ.டி.சி. ரத்னதீபா ஹோட்டலில் இடம்பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் அமைச்சர் உரையாற்றுகையில், ஈரானின் தேசிய தினம் கொண்டாடப்படும் இந்த நாளில், ஈரான் அரசு மற்றும் அந்த நாட்டு மக்களின் வளமான எதிர்காலத்துக்காக இலங்கை அரசின் சார்பிலும், இந்த நாட்டு மக்களின் சார்பிலும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கை – ஈரானுக்கிடையில் மிக நீண்டகாலமாகச் சிறந்ததொரு நட்புறவு நிலவி வருகிறது. இலங்கையுடன் நீண்டகாலமாக இராஜதந்திர ரீதியிலான நட்புறவைப் பாராட்டிவருகிறது.

ஈரான் சுனாமி, கோவிட்–19 மற்றும் தித்வா சூறாவளி போன்ற அனர்த்த நிலைமைகளின் போது எமக்கு ஆதரவாக இருந்தது.

அத்தோடு அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் வணிகம், தொழில்நுட்பம், கலாச்சாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளின் மேம்பாட்டுக்கான திட்டங்களிலும் ஈரான் தனது ஒப்பற்ற பங்கை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக நாடுகளின் தொழில்நுட்ப மற்றும் நவீனமயமாக்கலின் புரட்சியில், நனோதொழில்நுட்பம்,உயிரியல்தொழில்நுட்பம் மற்றும் மருந்துத் துறையின் ஆதரவையும் வலுப்படுத்திச் சுகாதாரத் துறையை மேம்படுத்தும் திட்டத்திலும் இரு நாடுகளுக்கிடையிலான உறவு மிகப் பெரிய பலமாக உள்ளது.

எதிர்காலத்திலும் ஈரான் – இலங்கைக்கு இடையிலான நட்புறவை வலுப்படுத்தத் தற்போதைய அரசு கடுமையாகப் பாடுபடும். அதை வலுப்படுத்துவதற்கு அவசியமான விடயங்களும் மேற்கொள்ளப்படும் என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஈரானியத் தூதுவர் கலாநிதி அலிரேசா டெல்கோஷ் மற்றும் ஈரானியத் தூதரகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.



# அக்குரேகொட இரட்டைக் கொலை: சகோதரர்கள் பொலிஸாரால் கைது!

## எரிந்த நிலையில் காரும் மீட்பு

இலங்கையின் அக்குரேகொட பகுதியில் சட்டத்தரணி மற்றும் அவரது மனைவி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்த விசாரணையின் ஒரு முக்கிய கட்டமாக, கொலையாளிகளுக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**கைது நடவடிக்கை மற்றும் அடையாளம்**

மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், கொட்டாவை பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது இந்த இரு சந்தேக நபர்களும் சிக்கியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20 மற்றும் 24 வயதுடையவர்கள் ஆவர். இவர்கள் இருவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**கைப்பற்றப்பட்ட முக்கிய தடயங்கள்**

சந்தேக நபர்களைக் கைது செய்த போது, அவர்கள் வசமிருந்த ஒரு கார் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. படுகொலைச் சம்பவத்தின்போது கொலையாளிகளுக்குப் போக்குவரத்து வசதி செய்து கொடுத்ததற்கும், தப்பிச் செல்வதற்கு உதவியதற்கும் இந்த கார் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சட்டத்தரணி மற்றும் அவரது மனைவி ஆகியோர் அவர்களது வீட்டிலேயே மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். இது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் பல விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன.

கைது செய்யப்பட்ட சகோதரர்களிடம் தற்போது வாக்குமூலங்கள் பெறப்பட்டு வருகின்றன.

இக்கொலைக்கான உண்மையான சூத்திரதாரி யார்? மற்றும் இதன் பின்னணியில் உள்ள தனிப்பட்ட பகை அல்லது ஏனைய காரணங்கள் என்ன? என்பது குறித்து விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, மேலதிக விசாரணைக்காக தடுப்புக்காவலில் வைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய முக்கிய குற்றவாளிகளையும் விரைவில் கைது செய்ய முடியும் என பாதுகாப்புத் தரப்பினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ சீனத் தூதருடன் நிதி, திட்டமிடல் சந்திப்பு

சீனப் புத்தாண்டை முன்னிட்டு சீனத் தூதுவரும் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோவும் இடையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷி ஷென்ஹொங் மற்றும் தொழிலாளர் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் துறை பிரதியமைச்சருமான அனில் ஜெயந்த பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

சந்திப்பின்போது அமைச்சர் அனில் ஜயந்தபெர்னாண்டோ,சீனப்புத்தாண்டை முன்னிட்டு தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கிடையிலான நீண்ட கால நட்புறவு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் கலாசாரப் பகிர்வு தொடர்பாக விரிவான கலந்துரையாடல் இதன் போது இடம்பெற்றது.

இலங்கை மற்றும் சீன ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவு பல ஆண்டுகளாக வலுப்பெற்று வருவதாகவும், பரஸ்பர நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தும் இணைந்து செயல்பட விருப்பம் இருப்பதாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மீனவர் பிரச்சினையில் தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை

## விஜய் கண்டனம்



"மீனவர்கள் பிரச்சினையில் தமிழக அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாம் கடிதம் எழுதுவதே போதும் என்று தமிழக முதல்வர் எண்ணுகிறாரா?"

– இவ்வாறு த.வெ.க. தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில்,

"புதுச்சேரியின் காரைக்கால் மாவட்டம், காசாக்குடிமேடு, கிளிஞ்சல்மேடு கிராமங்களைச் சேர்ந்த 25 மீனவர்களை, எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது. அத்துடன், அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது.

இந்த அடாத செயல், அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் 25 பேரையும்உடனடியாகவிடுவித்து,அவர்களதுபடகுகளையும் மீட்டுத் தர ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில், இலங்கை நீதிமன்றத்தால் கடந்த 3 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட பிறகும் தமிழ்நாட்டு மீனவர்கள் 9 பேர், சொந்த ஊருக்குத் திரும்ப முடியவில்லை. அவர்கள் அங்கே பரிதவித்து வருவதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளது வேதனை அளிக்கிறது. மேலும் தமிழக மீனவர்கள் 3 பேர், இலங்கை நீதிமன்றம் விதித்த அபராதத் தொகையைச் செலுத்த முடியாமல் சிறையில் வாடுகின்றனர்.

மீனவர்களுக்குத் தொடர்ந்து இது போல நிகழ்வதைத் தடுக்க, தமிழக அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாம் கடிதம் எழுதுவதே போதும் என்று தமிழக முதல்வர் எண்ணுகிறாரா? இது ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த மீனவர்கள் அனைவரையும் உரிய முறையில் மீட்டு, சொந்த ஊருக்கு அழைத்து வர வேண்டும்.

மனிதாபிமான முறையில் இலங்கை அரசிடம் பேசி, தாமதமின்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட மாநில அரசுகள், ஒன்றிய அரசை உண்மையாகவே உணர்வுப்பூர்வமாக வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

## "தவறி வந்த ஒரு வார்த்தை":

# நடிகை த்ரிஷா குறித்த கருத்துக்கு நயினார் நாகேந்திரன் வருத்தம்





"அன்றைக்கு அது தவறி வந்த ஒரு வார்த்தை. உண்மையில் யாரேனும் இதில் வருத்தப்படுவார்களேயானால், என்னுடைய வருத்தத்தை நான் மனப்பூர்மாக தெரிவித்துக் கொள்கிறேன்."

– இவ்வாறு நடிகை த்ரிஷா குறித்த பேச்சுக்கு தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் மன்னிப்புக் கோரியுள்ளார்.

இது குறித்து நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய நயினார் நாகேந்திரன்,

"என்னுடைய அரசியல் வாழ்க்கையில் எந்தவொரு தனிநபர் விமர்சனத்தையும் நான் அனுமதிப்பதில்லை. நானும் அவ்வாறு பேசியதில்லை. அன்றைக்கு அது தவறி வந்த ஒரு வார்த்தை. அது குறித்து எங்கள் கட்சியின் அகில இந்திய மகளிரணி தலைவி வானதி சீனிவாசன் என்னிடம் பேசினார். நேற்று முன்னாள் தலைவர் அண்ணாமலையின் வீட்டுக்குச் சென்றபோது இந்த விவகாரம் குறித்து பேசினார்.

உண்மையில் யாரேனும் இதில் வருத்தப்படுவார்களேயானால், என்னுடைய வருத்தத்தை நான் மனப்பூர்மாக தெரிவித்துக் கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக நேற்று நயினார் நாகேந்திரனின் பேச்சு குறித்து நடிகை த்ரிஷாவின் தரப்பில் வழக்கறிஞர் வெளியிட்ட அறிக்கையில்,

"மாநில அரசியலில் உயர் பதவியில் இருக்கும் ஒருவர் இத்தகைய அருவருப்பான மற்றும் பொருத்தமற்ற கருத்தை வெளியிடுவார் என்று எனது கட்சிக்காரர் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

எனது கட்சிக்காரர் எந்த அரசியல் கட்சியுடனும் இணைந்திருக்கவில்லை என்பதையும், அவ்வாறு இருக்கவும் விரும்பவில்லை என்பதையும் மிகத் தெளிவாகக் கூறுகிறார். மேலும், எனது கட்சிக்காரர் கடந்த காலங்களில் இருந்தது போலவே, அரசியலில் எப்போதும் நடுநிலையான நிலைப்பாட்டையே எடுத்துள்ளார்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சில நாள்களுக்கு முன்பு விஜய் – திரிஷா குறித்து பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியமை பெரும் சலசலப்பை உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.







# அணு ஆயுத தளத்தை விரிவாக்கும் சீன அரசு

சீனா இரகசியமாக அணு ஆயுத தளங்களின் விரிவாக்க பணிகளை மேற்கொண்டு வருவதாக அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியுள்ளது.

சீனா சிச்சுவான் மாகாணத்தில் இரகசியமாக அணு ஆயுதத் தளங்களின் விரிவாக்க பணிகளை மேற்கொண்டுவருவதை 2022 முதல் 2026ம் ஆண்டு வரையிலான செயற்கைக்கோள் புகைப்படங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

ரென்னி பாபியர்ஸ் என்ற புவிசார் நிபுணர்கள் வெளியிட்ட தரவுகளின் அடிப்படையின் சிச்சுவானின் உள்ள ஜிடாங் என்ற தளத்தில் இந்த விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

செயற்கைக்கோள் புகைப்படங்களின் அடிப்படையில், இந்த அணு ஆயுத தளம் மறைவான பள்ளத்தாக்கு ஒன்றில் வலுவூட்டப்பட்ட பதுங்கு குழிகள், சிக்கலான குழாய் அமைப்புகள் மற்றும் மண் அரண்களுக்கு இடையே உருவாக்கப்பட்டு வருகிறது.

இந்த பிரம்மாண்ட கட்டமைப்பு புளூட்டோனியம் பதப்படுத்துதலுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2030 ஆம் ஆண்டுக்குள் சீனா தன்னுடைய அணு ஆயுத எண்ணிக்கையை 1000 ஆக உயர்த்த இலக்கு வைத்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவின் இந்த அணு ஆயுதத் தளங்களின் விரிவாக்க பணிகள் இந்தியாவின் இமயமலை எல்லைக்கு மிக அருகில் அமைந்து இருப்பது இந்தியாவுக்கு மிகப்பெரிய கவலையை ஏற்படுத்தியுள்ளது.

புவியியல் காரணிகள் ஒரு புறம் இருக்க, சீனாவின் அணு ஆயுத பலம், லடாக் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட எல்லை மாநிலங்களின் பாதுகாப்பு கவலைகளையும் அதிகரித்துள்ளது.

சீனாவின் நவீன ஏவுகணைகளுக்கு எதிராக இந்தியா அக்னி வி ஏவுகணை திட்டத்தை பலப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

# நைஜீரியாவில் துப்பாக்கிச் சூடு; 46 பேர் மரணம், பலர் கடத்தல்



நைஜீரியாவின் நைஜர் மாகாணம், பொர்கு நகரில் மூன்று கிராமங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 46 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி கிராமங்களுக்குள் ஆயுதங்களுடன் நுழைந்த கும்பல் இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

மேலும் 20 இற்கும் அதிகமானோரை துப்பாக்கி முனையில் கடத்தியும் சென்றுள்ளது.

இந்த இடத்துக்கு வந்த பாதுகாப்புப் படையினர் கடத்திச் செல்லப்பட்டவர்களை தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நைஜீரியாவில் அல்கொய்தா, போகோஹராம் போன்ற அமைப்புக்களும் ஆயுதக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள்- 17.02.2026




இன்று சிறப்பான பலன்கள் காணப்படும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம். உங்களிடம் உறுதி காணப்படும்.

பணியிடத்தில் சக பணியா ளர்க ளுடன் நட்பாக பழகுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நெருக்கமாக பழகுவீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள். இரு வரும் இன்றைய நாளை மகிழ்வுடன் கொண் டாடுவீர்கள்.

உங்கள் நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். உங்கள் பணப் பெட்டியில் பணம் கணிசமாக உயரும்.

கடவுள் அருளால் இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு மிகவும் சாதக மான நாள். நீங்கள் உங்கள் இலக் குகளை விரைந்து அடைவீர்கள்.நீங் கள் உங்கள் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள இன்றைய நாளை முழுவது மாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப் படும்.புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்கள் துணையுடன் ஆன்மீக யாத்திரை மேற் கொண்டு மகிழ்வீர்கள். இது கண்டிப்பாக உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நிதி நிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. இதனால் உங்கள் தன்னம்பிக்கை பாதிக்கும். ஆன்மீக சொற்பொழிவு கேட்டல், கோவிலுக்கு செல்லுதல் போன்றவற்றின் மூலம் ஆறுதல் பெறலாம். முக்கிய முடிவு கள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது.

நீங்கள் உங்கள் துணையிடம் கவனமற்ற வார்த் தைகள் பேசுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். மகிழ்ச்சியுடன் இருக்க பேச்சில் கடுமையை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்ளவும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக பணம் கரையும். போதிய அளவில் பணம் காணப்படாது.




இன்றைய நாள் நீங்கள் எதிர்பார்த்த படி இருக்காது. இன்று அதிர்ஷ்டத்தை நம்பி இருக்க இயலாது என்ற கார ணத்தினால் சுய முயற்சியை நம்புங் கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்வுக்கு நேரம் இருக்காது. சிறப்புடன் பணியாற்ற திட்டமிட்டு பணி புரிய வேண்டும்.

உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க இயலாது. உறவில் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவு காணப்படும். இது உங்களுக்குக் கவலை அளிக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சி காணப்படும் நாள். கடினமான பணிகளையும் இன்று எளிதாக முடிப்பீர்கள். உடல் மற்றும் மன தைரியத்துடன் காணப்படு வீர்கள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை பயன்படுத்து வீர்கள். நீங்கள் பணி செய்யும் பானி உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தை களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே அன்பு பெருகும்.

பண வரவு தேவையை விட அதிகமாக காணப்படும். சேமிப்பு கணிசமாக உயரும். பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்று ஆக்க பூர்வமான பலன்கள் கிடைக்கும். உங்களிடம் காணப்படும் வலிமை காரணமாக இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். மூத்தவர்களின் ஆதரவு பெறுவீர்கள். அதனால் சிறப்பாக உணர்வீர்கள்.

நீங்கள் சிறந்த முறையில் பணி யாற்றுவீர்கள். உங்கள் பணிகளை ஒழுங்கு முறையுடன் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு காணும் அதிர்ஷ்டம் காணப்படு கின்றது. உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள் வீர்கள். உங்கள் சேமிப்பு உயரும்.




இன்றைய நாள் சற்று மந்தமாக இருக்கும். இன்று பாதகமான விளை வுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் எந்தச் செயலையும் யோசித்து செய்ய வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சி களில் ஈடுபடுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் இனிமையற்ற சூழ்நிலையை சந்திப்பீர்கள். இதனால் இருவரிடையே தவறான புரிந்துணர்வு ஏற்படும்.நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் காணப்படும். அதனை எதிர்கொள்வது கடினமாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. இன்று பாதகமான விளைவுகளை தடுக்க யோசித்து முடிவெடுங்கள். இன்று நீங்கள் வீட்டுப் புனரமைப்புக்காக பணம் செலவு செய்ய நேரலாம்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு கொள்ள இயலாது. மேலும் பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையிடம் வெளிப்படையாக உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வது நல்லது. இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வும், மகிழ்ச்சியும் காணப்படும். இன்று பண இழப்பு காணப்படும். அஜாக்கிரதை காரணமாக சிறிது பணத்தை இழப்பீர்கள்.உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள்- 17.02.2026




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காண்பீர்கள். இன்றைய நாளில் நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

இன்று சுமூகமாக பணிகள் நடக்க உகந்த நாள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தை மற்றும் நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்களுக்கு பாராட்டு வகையில் ஊக்கத் தொகை கிடைக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று விரும்பும் பலன் கிடைக்க சாத்தியமான நாள் அல்ல. பிறருடன் பேசும்போது கவமாகப் பேச வேண்டும். நண்பர்களை சந்திப்பதை தவிருங் கள். இறைவழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

அதிக பணிகள் காரணமாக பணி யில் தாமதம் காணப்படும்.பணிகளை குறித்தநேரத்தில் மிச்சமின்றி முடிக்க நீங்கள் திறமையாக பணியாற்ற வேண்டும்.சிறிய விஷயத்தையும் நீங்கள் தீவிரமாக எடுத்துக் கொள்வதன் காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.இன்று முதுகு வலி ஏறபட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவ சியம்.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். எந்த செயலையும் தொடங்கு முன் யோசித்துச் செயற்படவும். இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். அதனை கவனமுடன் கையா ளவும். முக்கியமான முடிவுகள் எடுப் பதை தவிர்க்கவும்.

உங்கள் எதிர்காலம் குறித்த பயம் காரணமாக பணியிடத்தில் பதட்டம் காணப்படும். நீங்கள் அமைதியாக திறமையுடன் உங்கள் பணிகளை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் மனதில் அமைதியின்மை காணப்படும். இதனால் உணர்வுகளை பகிர்ந்து கொள்வது கடினமாக இருக்கும்.

வீட்டை புதுப்பிக்க அல்லது புனரமைக்க பணச் செலவு நேரலாம். உங்கள் சேமிப்பு நிலை உயர குறைந்த வாய்ப்பே உள்ளது.




இன்று சாதகமான விளைவுகள் கிடைக்காது. இதனால் குழப்பமான மனநிலை காணப்படும். உங்கள் கருத்துக்களை தெளிவாக எடுத்துக் கூற இயலாது. பிறருடன் பேசும்போது கவனம் தேவை.

இன்று தேவையற்ற பயணங்கள் காணப்படும். பணியில் உங்கள் வளர்ச்சிக்கான வாய்ப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

பணப்பற்றாக்குறை இன்று உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள். சூழ்நிலையைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.





# திருக்கோணேஸ்வரம் நகர் வலம் ஆரம்பம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

தென்கயிலை எனச் சிறப்பித்துக் கூறப்படுவதும், திருஞானசம்பந்தரால் தேவராம் பாடப்பட்ட திருத்தலமுமாகிய திருக்கோணேஸ்வரம் மாதுமைம்பாள் சமேத திருக்கோணைநாதரின் வருடாந்த நகர்வலம் நேற்று மாலை ஆரம்பமானது.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்திலி ருந்து ஆரம்பமான நகர்வலம் மணிக் கூட்டுச்சந்தி ஊடாக ஏகாம்பரம் வீதியூடாக சென்று 3 ஆம் கட்டை சந்தியை அடைந்து அங்கிருந்து செல்வநாயகபுரம், அன்புவெளிபுரம் ஊடாக பாலையூற்றை சென்றடைவதுடன் முதல் நாள் நகர் வலம் நிறைவு பெற்றது.